பெயர்: ........................... தேதி: ...........................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

பகுதி_3

**சான்று:-** இந்திய தேசிய நூலகம் கொல்கத்தாவில் உள்ளது.

- ☐ இந்திய தேசிய நூலகம் அமெரிக்காவில் உள்ளதா?
- ☑ இந்திய தேசிய நூலகம் எங்கு உள்ளது?
- ☐ இந்திய தேசிய நூலகங்கள் எத்தனை உள்ளன?

1. பேருந்திற்கு நான்கு சக்கரங்கள் உள்ளன.

- ☐ பேருந்திற்கு எத்தனை சக்கரங்கள் உள்ளன?
- ☐ பேருந்திற்கு இரண்டு சக்கரங்கள் உள்ளதா?
- ☐ பேருந்து எதற்கு உதவுகிறது?

2. நூல் கோர்க்க உதவுவது ஊசி.

- ☐ நூல் கோர்க்க உதவும் கருவிகள் எத்தனை?
- ☐ கத்தரிக்கோல் நூல் கோர்க்க உதவுகிறதா?
- ☐ நூல் கோர்க்க உதவுவது எது?

3. பறவைகள் கூட்டில் வசிக்கின்றது.

- ☐ வீட்டில் பறவைகள் வசிக்கின்றதா?
- ☐ பறவைகள் எங்கே வசிக்கின்றது?
- ☐ கூண்டில் எத்தனை பறவைகள் வசிக்கும்?

4. குழந்தைகளுக்குத் தடுப்பூசி நோயைத் தடுக்கப் போடப்படுகிறது.

- ☐ தடுப்பூசி போடப்படுவதின் காரணங்களைக் கூறுக.
- ☐ குழந்தைகளுக்குத் தடுப்பூசி ஏன் போடப்படுகிறது?
- ☐ தடுப்பூசியை வருடத்திற்கு எத்தனை முறை போடலாம்?

பெயர்: .......................... தேதி: ..........................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

1. நண்டுக்கு பற்கள் வயிற்றில் அமைந்து உள்ளன.

- ☐ நண்டுக்கு பற்கள் எங்கு அமைந்து உள்ளன?
- ☐ நண்டுக்கு பற்கள் உள்ளதா?
- ☐ நண்டுக்கு பற்கள் எத்தனை உள்ளன?

2. மீனவர்கள் மீன் பிடிக்கும் தொழில் செய்வார்கள்.

- ☐ மீனவர்கள் என்ன தொழில் செய்வார்கள்?
- ☐ நெசவு தொழில் செய்பவர்கள் மீனவர்களா?
- ☐ மீன் பிடிப்பவர்கள் யார்?

3. 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை கன்னியாகுமரியில் உள்ளது.

- ☐ திருவள்ளுவர் சிலை கன்னியாகுமரியில் நடுக்கடலில் உள்ளதா?
- ☐ 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை எங்கு உள்ளது?
- ☐ 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை எப்படி உள்ளது?

4. வெட்டுக்கிளிக்கு காதுகள் காலில் உள்ளன.

- ☐ வெட்டுக் கிளிக்கு காதுகள் எத்தனை உள்ளது?
- ☐ வெட்டுக்கிளிக்கு காதுகள் எங்கு உள்ளன?
- ☐ வெட்டுக்கிளி ஒரு பறவையா?

5. பாரதியார் இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடினார்.

- ☐ பாரதியார் அமெரிக்க நாட்டின் விடுதலைக்காகப் போராடினாரா?
- ☐ பாரதியார் எத்தனை நாடுகளின் விடுதலைக்காகப் போராடினார்?
- ☐ பாரதியார் எந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடினார்?